Code No: 5

[stamp]

# விடியல்

எங்கு எதை
தொலைத்ததோ
தெரியவில்லை
தினமும் எல்லோரையும்
சிரிக்க வைத்து
வருகின்றது
இந்த காலை!

இந்த காலை
இந்த விடியல்
எண்ணுக்குள்
புத்துணர்ச்சி
தருகிறது!

கதிரவனின் பார்வை பட்டு
ஒவ்வொரு விடியலும்
மனிதற்க்கு
மகிழ்ச்சி தருகிறது!

அந்த விடியல்
மனிதனை புதிய
ஒருவனாக்கி
மாற்றி விடுகிறது

ஒவ்வொரு விடியலும்
ஒவ்வொரு காத்திருப்பு !
அதை மனிதர்களும்
இயற்கையும் செய்து-
கொண்டே இருக்கின்றாய்

நானும் தான்
செய்கிறேன்
ஏன் இந்த
விடியல் என்னிடம்
மட்டும் பேசவில்லை ?

இந்த விடியல்
பறவைகளையும்
மலருகளையும்,
ஆழத்திலிருக்கும்
மயக்கத்திலிருந்து
எழுப்பி விடுகிறது !

ஏன் என்னை மட்டும்
எழுப்ப வில்லை !
நிஜமாகவும் இது
தேவனின் கனிவு தான் !

தேவனின் அருள் பெற்றிய
மனிதனுக்கு கிடைத்த
பொக்கிஷம் தானிது !

விடியலில்லாமல் நாமில்லை
நாமில்லாமல் இந்த இயற்கை
இல்லை !

மனிதர்களுக்கு புது
உயிர் தருகிற
இந்த விடியல்,
அவரை சிறக்க
வைக்கும்
விடியல்
ஏன் என்னிடம்
சொல்லாமல்
கதிரவனிடம்
செல்லுகிறது ?
விடியல் என்பது
மலரை போல் அசை ! தான்
கதிரவன் இருக்கும் வரை
இருக்கும் !
விடியலை ! ஒவ்வொரு நாளும்
உன் வரவை எதிர் பார்த்து-
கொண்டே இருப்பேன்'
என்னை தனியாக விட்டு
சென்று விடாதே !